DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : Crl.M.P.2081/2022

Miscellaneous :

Sessions : witness 2

Deposition of Witness for

**மனுதாரர்**

| | |
|---|---|
| Name | கார்த்திகேயன் |
| Father / Husband Name | தண்டபாணி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **24.09.2025**

**பிரமாண வாக்குமூலம்**

நான் தற்போது சின்னகயப்பாக்கத்தில் வசித்து லாரி டிரைவராக வேலை செய்து வருகிறேன். நான் சவாரி வரும்போது வெளியூருக்கு சென்று லாரி ஓட்டுவேன். கடந்த 15.01.2022 ம் தேதி நான் வீட்டில் இருந்தபோது மாலை 3.00 முதல் 3.45 மணியளவில் ஜகதீசன் என்பவர் எனக்கு போன் மூலம் எனது தந்தை தண்டபாணி என்பவருக்கு அச்சிறுபாக்கம் ஆர்ச் எதிரே திண்டிவனத்தில் இருந்து சென்னைக்கு செல்லும் சாலையை கடப்பதற்காக அவரது டிவிஎஸ் 50 இருசக்கர வாகனத்தில் நின்று கொண்டிருந்தபோது திண்டிவனத்தில் இருந்து சென்னை நோக்கி சென்ற அரசு பேருந்து அதிவேகமாக வந்து மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் சொன்னார். சம்பவயிடத்தில் இருந்து நான் 1/2 கிமீ தூரத்தில் அச்சிறுபாக்கத்தில் வாடகை வீட்டில் இருந்தேன். நான் சம்பவயிடத்திற்கு வந்த போது எனது அப்பாவிற்கு வலது கால் மற்றும் கையில் பலத்த காயம் ஏற்பட்டும் காதில் ரத்தம் வந்து அவர் சுயநினைவு இன்றி இருந்தார். பின்னர் நான் எனது தந்தையை 108 ஆம்புலன்ஸ் மூலம் மேல்மருவத்தூர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அங்கு என் அப்பாவிற்கு காலில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதால் அவரை காப்பாற்றுவதற்கு சிரமம் என்று கூறியதால் அவரை மேல் சிகிச்சைக்காக சம்பவதினத்தன்றே தனியார் ஆம்புலஸ் மூலம் சென்னையில் குரோம்பேட்டையில் உள்ள குமார்ஸ் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு என் அப்பா ஒரு மாதம் சிகிச்சையில் இருந்தார். பின்னர் மேற்படி மருத்துவமனையில் இருந்து சிகிச்சை முடிந்து எங்கள் வீட்டிற்கு அழைத்து வந்தோம். பின்னர் நான் மேற்படி மருத்துவமனையில் இருந்தபோது 18.01.2022 ம் தேதி போலிசார் என்னையும் என் அம்மாவையும் மட்டும் விசாரித்தார்கள். புகாரை மருத்துவமனையில் இருந்து போலிசார் எங்களை எழுதி கொடுக்க சொல்லி வாங்கி சென்றனர். எனது அம்மா அந்த புகாரில் கையொப்பம் செய்தார். எனது தங்கைக்கு விபத்து குறித்து தெரியாது என்பதால் அவரை விசாரிக்கவில்லை. எனது அப்பா சிகிச்சையில் இருந்ததால் அவரையும் விசாரிக்கவில்லை. எனது தந்தையை அவ்வப்போது மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சை அளிப்போம். எனது அப்பா சென்ற டிவிஎஸ் 50 வாகனம்

சம்பவயிடத்திலேயே ஓரமாக இருந்ததை நான் காவல் நிலையத்திற்கு ஒப்படைக்க செல்லும் போது மேற்படி வண்டியின் பதிவெண்ணை எழுதி கொடுக்குமாறு காவலர் கூறினார். நான் எழுதி கொடுத்தேன்.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : Crl.M.P.2081/2022

Miscellaneous :

Sessions : witness 1

Deposition of Witness for

**மனுதாரர்**

| | |
|---|---|
| Name | ஜெகதீசன் |
| Father / Husband Name | மாசிலாமணி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **24.09.2025**

**பிரமாண வாக்குமூலம்**

நான் தற்போது சின்னகயப்பாக்கத்தில் வசித்து கட்டுமான தொழில் செய்து வருகிறேன். கடந்த 15.01.2022 ம் தேதி மாலை சுமார் 3.00 முதல் 3.30 மணிக்குள் அச்சிறுபாக்கத்திற்கு என் தம்பிக்கு சொந்தமான ஸ்பிளண்டர் பிளஸ் இருசக்கர வாகனத்தில் நான் மட்டும் சென்று பெயிண்ட் வாங்கிக்கொண்டு எனது வீட்டிற்கு திரும்ப திண்டிவனம் நோக்கி செல்லும் சாலையில் வந்து கொண்டிருந்தபோது எனக்கு முன்னால் சென்ற டிவிஎஸ் 50 இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த எங்கள் ஊரை சேர்ந்த தண்டபானி என்பவர் மேற்படி சாலையிலிருந்து சின்னகயப்பாக்கம் செல்வதற்காக தனது வாகனத்தை திருப்பும் போது திண்டிவனத்தில் இருந்து சென்னை நோக்கி சென்ற அரசு பேருந்து அவர் மீது மோதிவிட்டு நிற்காமல் சென்றுவிட்டது. பின்னர் பொது மக்கள் அனைவரும் சேர்ந்து மேற்படி பேருந்தை நிறுத்தினார்கள். நான் விபத்தில் காயம் பட்ட தண்டபானியை பார்க்க சென்றதால் மேற்படி பேருந்து ஓட்டிய நபரை நான் பார்க்கவில்லை. பின்னர் நான் சென்று பார்க்கும் போது தண்டபானிக்கு வலது கால் மற்றும் வலது கையில் அடிப்பட்டிருந்தது. மேலும் அவரது காதில் இரத்தம் வந்திருந்தது. உடனே அங்கு மக்கள் கூடிவிட்டனர். நான் தண்டபானியின் மகன் கார்த்திகேயன் என்பவருக்கு போன் மூலம் தகவல் சொன்னேன். பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் அவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். சம்பவயிடத்தில் எனக்கு தெரிந்த வேறு நபர்கள் எவரும் இல்லை. அதன் பின்னர் நான் அவரை பார்க்கவில்லை. நான் அவர் மருத்துவமனையில் இருந்து வந்த பின்னர் அவரின் வீட்டிற்கு சென்று பார்த்தேன்.